## பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2018-19 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.205/கனிமம்/2017, நாள் 23.09.2017-ன்படி பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது ஆவண எண் IV49/2017, நாள் 27.9.2017-ன்படி பெரம்பலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ.எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் | 1 | மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர் |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர், பெரம்பலூர் | 2 | மாவட்ட வருவாய் அலுவலர், பெரம்பலூர் |
| 3 | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, பெரம்பலூர் | 3 | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, பெரம்பலூர் |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர் | 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர் |
| 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊராட்சிகள்), வளர்ச்சி, பெரம்பலூர். | 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊராட்சிகள்), வளர்ச்சி, பெரம்பலூர். |
| 6 | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், பெரம்பலூர் | 6 | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சி துறை, பெரம்பலூர் |
| 7 | முதன்மைக் கல்வி அலுவலர், பெரம்பலூர். | 7 | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், பெரம்பலூர் |
| 8 | மாவட்டக் கருவூல அலுவலர், பெரம்பலூர் | 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழக மாசு கட்டுப்படாட்டு வாரியம், அரியலூர் |
| 9 | மாவட்ட சமூக நல அலுவலர், பெரம்லூர் | 9 | மாவட்ட வன அலுவலர், பெரம்பலூர் |
| 10 | உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), பெரம்பலூர் | 10 | முதன்மை பொறியாளர், நீர் ஆதார அமைப்பு, பொ.ப.துறை, திருச்சி |
| 11 | முனைவர்.அன்பழகன், 42, 3வது குறுக்கு தெரு, செல்வா நகர், நான்கு ரோடு, துறைமங்கலம் அஞ்சல்,பெரம்பலூர். | 11 | உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, பெரம்பலூர் |
| 12 | திரு.பெரியசாமி, தமிழ் ஆசிரியர், | 12 | மாவட்ட கருவூல அலுவலர், பெரம்பலூர் |
| | | 13 | மாவட்ட சமூக நல அலுவலர்,பெரம்பலூர் |

| | | | |
|---|---|---|---|
| | | 14 | துணை இயக்குநர்,(பொது சுகாதார மைய பொறுப்பாளர்) சுகாதார பணிகள், பெரம்பலூர் |
| | | 15 | முதன்மை கல்வி அலுவலர், பெரம்பலூர் |
| | | 16 | இணை . இயக்குநர், அரசு சுகாதார துறை, பெரம்பலூர் |

பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, பெரம்பலூர் இந்தியன் வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.6569346347) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 31 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும் 68 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள 31 பெருங்கனிம உரிமங்களில் முப்பது பெருங்கனிம உரிமங்கள் 12.01.2015-க்கு முன்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது மற்றும் ஒரு பெருங்கனிம குத்தகை உரிமம் 12.01.2015-க்கு பிறகு வழங்கப்பட்டதால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும் நடப்பிலுள்ள 68 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களில் 45 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையும், மீதமுள்ள 23 குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 39 கிராம ஊராட்சிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

| வ. எண். | கிராமம் | கிராமப் பஞ்சாயத்து | பிளாக் பஞ்சாயத்து |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை | கீழக்கரை | பெரம்பலூர் |
| 2 | எசனை | எசனை | |
| 3 | புதுநடுவலூர் | புதுநடுவலூர் | |
| 4 | கல்பாடி(வடக்கு (ம) தெற்கு) | கல்பாடி | |
| 5 | அரணாரை | ஆலம்பாடி | |
| 6 | செங்குணம் | செங்குணம் | |
| 7 | பெரம்பலூர்(வ) | பெரம்பலூர் | |
| 8 | கோனேரிப்பாளையம் | கோனேரிப்பாளையம் | |
| 9 | செஞ்சேரி | ஆலம்பாடி | |
| 10 | எறையூர் | கல்பாடி | |
| 11 | கவுள்பாயைம் | கவுள்பாயைம் | |

| | | | |
|---|---|---|---|
| 12 | வெங்கலம் | வெங்கலம் | வேப்பந்தட்டை |
| 13 | எறையூர் | எறையூர் | |
| 14 | பசும்பலூர் | பசும்பலூர் | |
| 15 | பாண்டகப்பாடி | பாண்டகப்பாடி | |
| 16 | நெய்குப்பை | நெய்குப்பை | |
| 17 | வெண்பாவூர் | வெண்பாவூர் | |
| 18 | கை.களத்தூர் | கை.களத்தூர் | |
| 19 | முகமதுபட்டிணம் | முகமதுபட்டிணம் | |
| 20 | பாடாலூர் (கிழக்கு) | பாடாலூர் (கிழக்கு) | ஆலத்தூர் |
| 21 | நாரணமங்கலம் | நாரணமங்கலம் | |
| 22 | நாட்டார்மங்கலம் | நாட்டார்மங்கலம் | |
| 23 | காரை | காரை | |
| 24 | தேணி | தேணி | |
| 25 | செட்டிக்குளம் | செட்டிக்குளம் | |
| 26 | வரகுபாடி | வரகுபாடி | |
| 27 | கூத்தனூர் | கூத்தனூர் | |
| 28 | சிறுகன்பூர் | சிறுகன்பூர் | |
| 29 | கொளக்காநத்தம் | கொளக்காநத்தம் | |
| 30 | திருவளக்குறிச்சி | திருவளக்குறிச்சி | |
| 31 | இரூர் | இரூர் | |
| 32 | கீழப்புலியூர் | கீழப்புலியூர் | குன்னம் |
| 33 | சித்தளி | சித்தளி | |
| 34 | பேரளி(தெற்கு) | பேரளி(தெற்கு) | |
| 35 | வயலப்படி | வயலப்படி | |
| 36 | ஒலைப்பாடி(மேற்கு) | ஒலைப்பாடி | |
| 37 | பரவை | பரவை | |
| 38 | அசூர் | அசூர் | |
| 39 | ஒதியம்(மேற்கு) | ஒதியம் | |

பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2019-வரை ரூ.3,19,06,052/- (ரூபாய் மூன்று கோடியே பத்தொன்பது இலட்சத்து ஆறாயிரத்தி ஐம்பத்தி இரண்டு மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் நிதியாண்டில் பெரம்பலூர் மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ரூ.1,01,68,350/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | உயர் முன்னுரிமையா / பிறமுன்னுரிமைத் திட்டமா |
|---|---|---|---|---|---|
| 1. | குடிநீர் வழங்கல் நோக்கம் | குடிநீருக்காக வெங்கலம் கிராமம் கிருஷ்ணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் அருகே திறந்த வெளி கிணறு அமைத்தல் | ரூ.3,00,000/- | உதவி இயக்குநர், ஊராட்சிகள், பெரம்பலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | கழிவு நீர் வடிகால் அமைத்தல் நோக்கம் | ஏறையூர் நரிகுறவர் காலணி முதல் புதுகுடியிருப்பு வரை கழிவு நீர் வடிகால் அமைத்தல் | ரூ.2,00,000/- | உதவி இயக்கநர், ஊராட்சிகள், பெரம்பலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| 3. | முள்வேலி அமைத்தல் நோக்கம் | சிறுகன்பூர் பஞ்சாயத்து வரகுபாடி குடிநீர் ஏரியில் பாதுகாப்பு | ரூ.2,50,000/- | உதவி இயக்கநர், ஊராட்சிகள், பெரம்பலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| 4. | குடிநீர் வழங்கல் நோக்கம் | பாடாலூர் கிராம பெண்கள் விடுதியில் புதிய ஆழ்துழை கிணறு மற்றும் நீர் மூழ்கி மோட்டார் அமைத்தல் | ரூ.1,25,000/- | உதவி இயக்குநர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நல அலுவலகம், பெரம்பலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| 5. | குடிநீர் வழங்கல் நோக்கம் | பெரம்பலூர் வார்டு II-ல் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு குடிநீர் இணைப்பு வழங்க மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்க | ரூ.4,10,000/- | ஆணையர், நகராட்சி, பெரம்பலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| 6. | மருத்துவ நோக்கம் | பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு தேவையான தளவாட பொருட்கள் வாங்குதல் | ரூ.28,01,000/- | திட்ட இயக்குநர், ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர் | பிற முன்னுரிமைத் திட்டம் |
| 7. | கல்வி நோக்கம் | பெரம்பலூர் மாவட்ட அரசு பெண்கள் விளையாட்டு விடுதிக்கு தேவையான தளவாட பொருட்கள் வாங்குதல் | ரூ.7,52,350/- | திட்ட இயக்குநர், ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| 8. | குடிநீர் வழங்கல் நோக்கம் | பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர்,பெரம்பலூர் மற்றும் வேப்பந்தட்டை கிராம பஞ்சாயத்துகளில் உள்ள குவாரியால் பாதிக்கபட்டுள்ள பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தினை 306 குக்கிராமங்களுக்கு ஒதுக்கீடு செய்தல் | ரூ.37,79,000/- | செயற்பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம், பெரம்பலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| 9. | குடிநீர் வழங்கல் நோக்கம் | கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் பெரம்பலூர் நகராட்சி மற்றும் குரும்பலூர் பேரூராட்சிகளை ஒட்டியுள்ள பகுதிகளில் | ரூ.15,51,000/- | செயற்பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம், பெரம்பலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆகஸ்ட்-2018 மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட ோ குடிநீர் குழாய்கள், நீரேற்றும் இயந்திரம் மற்றும் மின் உபகரணங்கள் வழங்குதல் | | | |
| 10 | மருத்துவ நோக்கம் | பெரம்பலூர் நகராட்சிக்கு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுவதற்கு | ரூ.30,00,000/- | ஆணையர், நகராட்சி, பெரம்பலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| 11 | விவசாய நோக்கம் | செட்டிக்குளம் கிராமத்தில் சின்ன வெங்காய வணிக வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதிப்புக்கூட்டு அலகிற்கு மும்முனை மின்சாரம் வழங்குதல் | ரூ.11,93,360/- | உதவி இயக்குநர், வேளாண்மைத்துறை, பெரம்பலூர் | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| | | மொத்தம் | ரூ.10168350/- | | |

எனவே, ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து 31.3.2019 வரை ரூ.1,01,68,350/- தொகை செலவழிக்கபபட்டு மீதம் இருப்பு தொகையாக ரூ.2,17,37,702/- (ரூபாய் இரண்டு கோடியே பதினேழு இலட்சத்து முப்பத்தி ஏழாயிரத்தி ஏழுநூற்றி இரண்டு மட்டும்) மட்டும் அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியை மாநில தலைமை கணக்காயரால் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளர்களை கொண்டு 2018–19 நிதியாண்டிற்கான கணக்குகள் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வறிக்கையானது பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை முன்பு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

தலைவர்,
பெரம்பலூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை
மற்றும் மாவட்ட ஆட்சியர், பெரம்பலூர்.